**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 711/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | திரு. செல்வராஜ் |
| Father's Name/Husband Name: | திரு. கருப்பபடையாச்சி |
| Village : | கீழப்பெரம்பலூர் |
| Taluk : | குன்னம் |
| Age : | 56/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 25.02.2026

**(1969–ம் ஆண்டின் 54வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**
**( எதிரி சேதுராமன் ஆஜர்)**
**முதல் விசாரணை**

நான் தற்போது கீழப்பெரம்பலூர் கிராமத்தில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். அ.சா.1 ரம்யாவைத் தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த ஓராண்டுக்கு முன்பு நான் திட்டக்குடி சென்று இரவு 7.30 மணிக்கு மேல் வீட்டிற்கு வந்த போது அ.சா.1 வீட்டின் அருகே கும்பலாக இருந்தது. என்னவென்று கேட்டபோது அ.சா.1க்கும் எதிரிக்கும் இடையே சண்டை என்று சொன்னார்கள். வேறு விவரங்கள் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**சாட்சியை பகுதி பிறழ் சாட்சியாக கருதி அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது**

**அரசுத் தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 11.06.2025ம் தேதியன்று போலிசார் விசாரணை செய்த போது கடந்த 20.05.2025ம் தேதியன்று இரவு 7.30 மணியளவில் நான் வீட்டிலிருந்த போது அ.சா.1 வீட்டருகே சத்தம் கேட்டதாகவும் அங்கு சென்று பார்த்த போது எதிரி அ.சா.1ன் வீட்டிலிருந்து வெளியே வந்து அ.சா.1யை பார்த்து தொலைத்து கட்டாமல் விடமாட்டேன் என்று சொல்லி மிரட்டி சத்தம் போட்டு வந்ததாகவும் அப்போது

அங்கிருந்த நபர்களிடம் கேட்ட போது எதிரி தவறான எண்ணத்தில் அ.சா.1யை அனுகியதாக என்னிடம் கூறினார் என்று போலிசாரிடம் வாக்குமூலம் கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரி தெரிந்தவர் என்பதால் அவருக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

அ.சா.1 ரம்யா குடும்பத்திற்கும் எதிரியின் குடும்பத்திற்கும் பாகப்பிரிவினை சம்மந்தமாக முன்விரோதம் இருந்து வருகிறது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது.

**மறு விசாரணை : இல்லை**

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.